பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

மக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங் : 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 14 சனிக்கிழமை (29 - 07 - 2000) VALAMPURI ஒலி: 222

# வவுனியாவில் குண்டுவெடிப்பு
# 2 மாணவர்கள் உட்பட ஐவர் பலி!

## மினி திரையரங்கில் சம்பவம்

(வவுனியா விசேட நிருபர்)

**வவுனியா தோணிக்கல் ஆலடிப்பகுதியில் நேற்று மாலை மினிசினிமா திரையரங்கில் இடம்பெற்றகுண்டு வெடிப்புச்சம்பவத்தில்இரண்டு மாணவர்கள் (சிறுவர்கள்) உட்பட ஐவர்கொல்லப்பட்டும்,பத்துப் பேர்கடுங்காயங்களுக்கும்ஆளாகியுள்ளனர்.**

**படுகாயம் அடைந்தவர்கள் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

தோணிக்கல் ஆலடிப்பகுதியில் நேற்று மாலை மினி சினிமா திரையரங்கில் ''சத்தியா'' என்னும் திரைப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது குண்டு வெடித்ததைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

படம் பார்த்துக்கொண்டிருந்தவர்களில் இரண்டு மாணவர்கள் உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர். 10 பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர், கொல்லப்பட்டவர்களும், காயமடைந்தவர்களும் வவுனியா, தோணிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பலியானோர் விபரம்

(வவுனியா)

வவுனியா தோணிக்கல் ஆலடிப் பகுதியில் மினிதிரையரங்கில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியான இரு மாணவர்கள் விபரம் வருமாறு:-

பண்டாரிக்குளம் விபுலானந்தா வித்தியாசாலை மாணவனான சிறிமனோரஞ்சன் நிசாந்தன் (வயது 14) குணராஜா மஜீத் (வயது 8),

(6ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தோர் விபரம்

(வவுனியா)

வவுனியா மினிசினிமா திரையரங்கில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயம்பட்டு வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

அருணகிரி (வயது 37), சிவகுமார் (வயது 29), லோகேஸ்வரன் [வயது 17], ஜெகதீஸ்வரன் (வயது 8), சிவநாதன் (வயது 32),

(6ஆம் பக்கம் பார்க்க)

## படகு கவிழ்ந்து

## அரசியல் அமைப்பு திருத்த மசோதாவை உடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு குறித்து பொதுசன ஐக்கிய முன்னணி அரசால் தயாரிக்கப்பட்ட உத்தேச அரசியல் அமைப்பு தீர்வுயோசனையை காலந்தாழ்த்தாமல் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவேண்டுமெனனக்கோரி ஆர்ப்பாட்ட

[6ஆம் பக்கம் பார்க்க]

## வைத்தியசாலைக்கு படையினர் ஆயுதங்களுடன் வருவது நல்லதல்ல

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்தியசாலைக்கு வரும் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் வருவது குறித்து மறுபரிசீலனை செய்யப்படவேண்டுமென மேற்படி வைத்தியசாலைப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்

[6 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலில் கள்ளவாக்கு போடும்முயற்சியில் அரச ஆதரவாளர்

### கள்ளவாக்காளர் அட்டை பிடிபட்டது

(கொழும்பு)

அரசாங்கம் இத்தேர்தலில் களவாக வாக்குகளைப் போட்டுவெற்றி பெறுவதற்கு உத்தேசித்துள்ளது அரசாங்கம் கள்ளவாக்கு போடுவதற்கு ஆயத்தம் செய்து வருவதை நிரூபிக்கும் வகையில் அரச ஆதரவாளர்களிடம் இருந்து கள்ளவாக்காளர் அட்டைகள் எம்மால் கண்டு பிடிக்கபபட்டுள்ளது.

இவ்வாறு ஐ தே. கட்சி செயலாளர் காமினி அத்துக்

அவர் மேலும் தெரிவிக்கையில் கள்ள வாக்குபோடும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதை ஐ. தே. கட்சிதூதுக்குழு ஒன்றுநேற்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து முறைப்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்

( 6 ஆம பக்கம் பார்க்க

## 'கதூர்ணா பீச்சில்' தீர்த்தமாட அனுமதி

(யாழ்ப்பாணம்)

நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு காரைநகர் கசூர்ணா பீச்சில் அடியார்களுக்கு தீர்த்தமாடுவதற்கு கடற்படையினர் இம்முறை அனுமதி வழங்கியுள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# படகு கவிழ்ந்து

# 21 தமிழ் அகதிகள் பலி!

(வவுனியா)

மன்னார்ப் பகுதியில் இருந்து படகு மூலம் தமிழகம் சென்ற 21 தமிழ் அகதிகள் படகு கவிழ்ந்து உயிரிழந்துள்ளதாக செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இம்மாதம் 24 ஆம் திகதி மன்னாரில் இருந்து படகு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றி ஒவ் றிங்கோ பயணிகள்கப்பல் 250 பயணிகளுடன் இன்று வருகிறது

(திருமலை)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் நேற்று 250 பயணிகளுடன் திருமலையில் இருந்து புறப்பட்டுள்ளதாக திருமலை பிரதேசசெயலர் எஸ். வேலும்

(6ஆம் பக்கம் பார்க்க)

அட்டைகள் எம்மால் கண்டு பிடிக்கபபட்டுள்ளது.

இவ்வாறு ஐ தே. கட்சி செயலாளர் காமினி அத்துக்கொறள நேற்று நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக

## கீரிமலையில் விசேடஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நாளை நடைபெறும் ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு கீரிமலையில் பிதிர்க் கடனை நிறைவேற்ற தேவையான ஏற்பாடுகள் யாவும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பக்தர்களின் வசதி கருதி விசேட போக்குவரத்துசேவையும் இடம் பெறும்என தெரிவிக்கப்படுகிறது. (க)

வுள்ள ஆடி அமவாசை விரதத்தை முன்னிட்டு காரைநகர் சசூர்ணா பீச்சில் அடி

யதற்கு கடற்படையினர் இம்முறை அனுமதி வழங்கியுள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## "கிபிர்" தாழப் பறந்தது

கடந்த சில தினங்களாக யாழ். மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்குமேலாக 'கிபிர்' விமானங்கள் தாழ்வாகவும் உயர்வாகவும் பறந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நேற்று சுன்னாகம் ,மல்லாகம், அளவெட்டி பகுதியில கிபிர் விமானம் தாழ்வாக பறந்து சென்று வட்டமிட்டதினால் மக்கள் மத்தியில் பதட்டம் நிலவுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். [வ]

## சரசாலை- கிளாலிப் பகுதியில் மோதல்

(கொழும்பு)

சரசாலை, கிளாலிப்பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக விசேட ஊடாக தகவல் நிலையம் நேற்று தெரிவித்தது.

இது தொடர்பாக தகவல்

(6ஆம் பக்கம்பார்க்க)

# யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி சம்பந்தமாக திணைக்களத் தலைவர்களுடன் டக்ளஸ் ஆராய்ந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு தேவையான எரிபொருள் அனுப்பப்பட்டதாக கொழும்பில் கூறப்படுகிறது, ஆனால் இங்கு நிலைமை முற்றிலும் மாறானதாகவே உள்ளது. என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஈ. பி. டி.பி. தலைமை அலுவலகத்தில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், மேலதிக அரச அதிபர் து வைத்திலிங்கம், பிரதேச செயலர்கள் பிரதேசசபை தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிவதாசன், கே. வி. குசேந்திரன் (ஜெகன்) உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர் தொடர்ந்துபேசுகையில்,

தற்போதைய சூழ்நிலையில் பொது மக்களை இன்னலிற் குள்ளாக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் இடம்பெற அனுமதிக்க முடியாது.

மண்ணெய், மற்றும் பெற்றோல், டீசல் போன்றவற்றை கூடிய விலைகொடுத்து பொதுமக்கள் வாங்க வேண்டிய நிலை தவிர்க்கப் படவேண்டும் என்றார்.

மேலும் யாழ் மாவட்டத்தின் பாடசாலை அபிவிருத்தி விவசாய நடவடிக்கை மக்களின் போசாக்கு சுகாதாரம் குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும் என்றார்.

(6 ஆம்பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

சின்னஞ்சிறு விளம்பரம்

ஜோதிடம்

03-08-2000ல்சனிமாற்றம் ரூ 12/- எங்கும் விற்பனையா இன்றது. கணிப்பாசிரியர்:- PROF. த: சத்தியதாஸன் (Mech.e Ele e Cey & Lon.) 3ம்கட்டை ஆலனக்கோட்டை கிடைக்குமிடம்:- பூபால சிங்கம், மக்மிலன் புத்தக சாலைகள் யாழ்ப்பாணம்; (1602)


# தென்மராட்சி இடப்பெயர்வினால் 3000 மழலைகளின் கல்வி பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி) மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசங்களில் யுத்த நெருக்கடிகள் காரணமாக ஏற்பட்ட இடம் பெயர்வினைத் தொடர்ந்து அங்கு இயங்கிய சுமார் நூறு முன்பள்ளிகளில் கல்விபயின்ற சுமார் 3 ஆயிரம் மழலைகளின் முன்பள்ளிக் கல்வி பாதிப்படைந்துள்ளது.

முன்பள்ளிகளில் கல்வி பயின்ற மழலைகளில் 90 சத வீதமானோர் தற்போது தங்கியுள்ள இடங்களிலுள்ள முன்பள்ளிகளுக்குச் செல்லாமல் வீடுகளிலேயே இருந்து வருகின்றனர்.

புதிய இடம், புதிய சூழ்நிலை போன்ற பிரச்சினைகளால் மழலைகள் பாதிப்படைந்துள்ளனரெனத்தெரிய வருகின்றது.

அதேவேளை இத்தகைய முன்பள்ளிகளில் கல்வி புகட்டிய முன்பள்ளி ஆசிரியைகளும் தமது சேவைகளை முன்னெடுக்கப் போதிய வாய்ப்புகள் மற்றும் ஊக்குவிப்புகள் இன்றி இருந்து வருகின்றனர்.

இத்தகைய முன்பள்ளி ஆசிரியைகளுக்கு இதுவரை காலமும் மதிப்பூதியம் வழங்கிய நிறுவனங்களும் யுத்த நெருக்கடிகள் மற்றும் இடம்பெயர்வுகளால் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக தெரிய வருகின்றது.

இது இவ்வாறிருக்க, முன்பள்ளி ஆசிரியைகளின் நலன் பேணும் பொருட்டு உருவாக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியைகள் சங்கங்களும் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியைகளின் துயர்துடைப்புப் பணிகளில் கூடத்தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல் மௌனமாக இருப்பது குறித்து முன்பள்ளி ஆசிரியைகள் பலத்த அதிருப்தியையும் விசனத்தையும் தெரியப்படுத்தியுள்ளனர் எனத்தெரியந்துள்ளது.

(க - 77)

## கூட்டுறவுச்சங்கம் இடமாற்றம்

[நெல்லியடி]

கொடிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தற்போது நெல்லியடி சந்திக்கு அருகில் தனியார் ஒருவரது வீட்டில் இயங்கி வருகின்றது

இதற்கு முன்னர் தற்காலிகமாக இச்சங்கமானது நெல்லியடியிலுள்ள வடமராட்சி பனை' தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கொத்தணி தலைமையகத்தில் இயங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது (த-18)

## கிராமசேவகரின் முன்மாதிரி

(தென்மராட்சி)

அண்மையில் ஏற்பட்டயுத்த அனர்த்தங்களினால், பருத்தித்துறை பிரதேசத்திலுள்ள வல்லிபுரம் கிராமசேவையாளர்பிரிவில் இடப்பெயர்ந்து தங்கியுள்ள சுமார் 85 குடும்பங்களிற்கு அக்கிராம மக்களின் ஆதரவுடன் அரிசி, மா, தேங்காய் போன்றவற்றினை கிராமசேவையாளர் எஸ். குமரகுரு வழங்கிவந்துள்ளார்.

கடந்த ஒன்றரைமாதகாலமாக பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்ற இச் சேவையினால் அப்பகுதியில் இடம்பெயர்ந்து வசிக்கும் மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

இந்த கிராமசேவையாளரின் முன்மாதிரியானசேவை குறித்து மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

(த-77)

## திருடர் கைவரிசை

(நெல்லியடி)

வதிரிப்பகுதியில் உள்ள பூவற்கரை பிள்ளையார், உல்லியனொல்லை அம்மன் ஆகிய கோயில்களின் உண்டியல்கள் உடைக்கப்பட்டு அண்மையில் பணம் களவாடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

அதேவேளை மீண்டும் தலைதூக்கியுள்ள திருட்டு முயற்சிகள் அப்பகுதி மக்களிடையே பெரும் பதற்றத்தை விளைவித்துள்ளது.

(த-18)

ஊர்காவற்றுறையில்

## வசதி அற்றோருக்கு கூரைத் தகடுகள் வழங்கல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் வசதி அற்றகுடும்பங்களுக்கு கூரைத் தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மெலிஞ்சி முனை, சின்னமடு தம்பாட்டி, நாரந்தனை ஆகிய இடங்களில் வசிப்போருக்கே கூரைத் தகடுகள்வழங்கப்பட்டுள்ளன.

இதற்கென ஊர்காவற்றுறை பிரதேச சபை நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [க-75]

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது:

| | |
|---|---|
| **சங்கானை** | |
| 123633 ஏ | 141779 ஏ |
| 142047 ஏ | 142047 பி |
| 146444 ஏ | 146444 பி |
| 146497 ஏ | 150388 ஏ |
| 150389 ஏ | 150456 ஏ |
| 153226 ஏ | 153226 பி |
| 153226 சி | 153226 டி |
| 153226 ஈ | 153351 ஏ |
| 153366 ஏ | 153485 ஏ |
| 153487 ஏ | |
| **யாழ்ப்பாணம்** | |
| 140845 ஏ | 140845 பி |
| 140845 சி | 140847 ஏ |
| 140847 பி | 140847 சி |
| 140856 ஏ | 142994 ஏ |
| 142994 பி | 144251 ஏ |
| 144251 பி | 144251 சி |
| 144251 டி | 144256 ஏ |
| 144256 பி | 44256 சி |
| 144256 டி | 144256 ஈ |
| 144298 ஏ | 144298 பி |
| 144298 சி | 144298 டி |
| 144298 ஈ | 144442 ஏ |
| 144442 பி | 144442 சி |
| 144442 டி | 144461 ஏ |
| 144461 பி | 144461 சி |
| 144461 டி | 144461 ஈ |
| 144461 எவ் | 144461 ஜி |
| 144661 ஏ | 144661 பி |
| 144661 சி | 144661 டி |
| 144661 ஈ | 144729 ஏ |
| 148182 ஏ | 148182 பி |
| 148182 சி | 149863 ஏ |
| 149875 ஏ | 149883 ஏ |
| 149896 ஏ | 149909 ஏ |
| 149909 பி | 149909 சி |
| 149914 ஏ | 149957 ஏ |
| 149990 ஏ | 149990 பி |
| 149999 ஏ | 149999 பி |
| 149999 சி | 149999 டி |
| 150000 ஏ | 150307 ஏ |
| 152571 ஏ | 152571. பி |
| 152571 சி | 152624 ஏ |
| 152624 பி | 152624 சி |
| 152638 ஏ | 152638 பி |
| 152652 ஏ | 152652 பி |
| 152674 ஏ | 152783 ஏ |
| 152836 ஏ | 152906 ஏ |
| 152906 பி | 152906 சி |
| 152923 ஏ | 152938 ஏ |
| 152943 ஏ | 152943 பி |
| 152943 சி | 152943 டி |
| 152943 ஈ | 152943 எவ் |
| 152943 ஜி | 152959 ஏ |
| 152959 பி | 152959 சி |
| 152959 டி | 153000 ஏ |
| 153032 ஏ | 153061 ஏ |
| 153065 ஏ | 153065 பி |
| 153065 சி | 153065 டி |
| 153065 ஈ | 153065 எவ் |
| **கோப்பாய்** | |
| 143841 ஏ | 143841 பி |

| | |
|---|---|
| 143375 ஏ | 145269 ஏ |
| 145269 பி | 146242 ஏ |
| 146246 ஏ | 152321 ஏ |
| 152322 ஏ | |
| **நல்லூர்** | |
| 142782 ஏ | 142782 பி |
| 144343 ஏ | 144343 பி |
| 144343 சி | 144476 ஏ |
| 144625 ஏ | 144625 பி |
| 144625 சி | 144625 டி |
| 144625 ஈ | 144625 எவ் |
| 144625 ஜி | 147946 ஏ |
| 147946 பி | 148171 ஏ |
| 149862 ஏ | 149956 ஏ |
| 149956 பி | 149956 சி |
| 149956 டி | 149956 ஈ |
| 149959 ஏ | 149959 பி |
| 149976 ஏ | 150245 ஏ |
| 152299 ஏ | 152710 ஏ |
| 152730 ஏ | 152795 ஏ |
| 152795 பி | 152795 சி |
| 152808 ஏ | 152808 பி |
| 152808 சி | 152808 டி |
| 152808 ஈ | 152808 எவ் |
| 152821 ஏ | 152830 ஏ |
| 152875 ஏ | 152875 பி |
| 152875 சி | 152875 டி |
| 152875 ஈ | 152875 எவ் |
| 152875 ஜி | 152979 ஏ |
| 152979 பி | 152979 சி |
| 152979 டி | 152981 ஏ |
| 152981 பி | 152994 ஏ |
| 152994 பி | 153024 ஏ |
| 153024 பி | 153029 ஏ |
| 153029 பி | 153029 சி |
| 153034 ஏ | 153034 பி |
| 153034 சி | 141383 ஏ |
| 146456 ஏ | 146456 பி |
| 146456 சி | 146456 டி |
| 150381 ஏ | 150381 பி |
| 150464 ஏ | 150464 பி |
| 150548 ஏ | 150548 பி |
| 150548 சி | 153232 ஏ |
| 153232 பி | 153251 ஏ |
| 153251 பி | |
| **சண்டிலிப்பாய்** | |
| 135486 ஏ | 135486 பி |
| 141792 ஏ | 143739 ஏ |
| 150404 ஏ | 150404 பி |
| 150430 ஏ | 150430 பி |
| 150430 சி | 150436 ஏ |
| 150567 ஏ | 150567 பி |
| 159567 சி | 150567 டி |
| 150599 ஏ | 150624 ஏ |
| 150624 பி | 153211 ஏ |
| 153284 ஏ | 153284 பி |
| 153441 ஏ | 153441 பி |
| 153441 சி | 153483 ஏ |
| 153448 ஏ | |
| **தெல்லிப்பழை** | |
| 142048 ஏ | 142048 பி |
| 142048 சி | 146321 ஏ |
| 150317 ஏ | 150317 பி |
| **உடுவில்** | |
| 144180 ஏ | 144180 பி |
| 146402 ஏ | 146402 பி |
| 146402 சி | 146402 டி |
| 146402 ஈ | 146476 ஏ |
| 150497 ஏ | 150930 ஏ |
| 153288 ஏ | 153473 ஏ |

(சு)

# தமிழ் மக்களை அழிவிலிருந்து காக்க சர்வதேச சமூகம் உதவ வேண்டும்

## தேசிய சமாதானக் குழு கோரிக்கை

(கொழும்பு)

யாழ் நகரையும் தமிழ் மக்களையும் அழிவில் இருந்து பாது காக்கவும், அவர்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தவும் சர்வதேச சமூகம் உதவ வேண்டுமென இலங்கையின் தேசிய சமாதான பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

பேரவையின் வெகுஜன ஊடகத்தொடர்பாளர் ஜெகான் பெரேரா விடுத்துள்ள அறிக்கையில், மோதலில்ஈடுபடும்அரசும், புலிகளும் மோதலை நிறுத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளைநிலை நிறுத்தப் பாடுபட வேண்டுமெனக் கேட்டுள்ளார்.

அரசியல் அமைப்பு சீர்திருத்தச்சட்டம், கட்சித்தாவல்ச்சட்டம் என்பனமக்களின் கவனத்தை ஈர்த்துள்ள வேளையிலும் யாழ். குடாநாட்டில் பாரிய மோதல்களும் இரத்தஆறுஓடும் என்ற அச்சமும் நிலவுவதாக ஜெகான் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## இடம் பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிப்போருக்கு 2ஆயிரம் ரூபா

### இன்று முதல் பதிவை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்தும், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுகளில் இடம் பெயர்ந்தபகுதிகளாகக் கணிப்பிடப்பட்ட பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின்கீழ் வசிக்கும் குடும்பத்தினருக்கு தற்காலிக குடிசை.உபகரணங்களுக்கான நன்கொடையாக 2000ரூபா வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேலே சொல்லப்பட்ட இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவில்இது வரை வசித்துக்கொண்டிருக்கும் குடும்பங்களின் தலைவர்கள் இன்று 29ஆம் திகதி தொடக்கம் தேசிய அடையாள அட்டை, நிரந்தர பிரதேச செயலர்களால் வழங்கப்பட்ட குடும்ப பங்கீட்டு அட்டை, இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் பிரிவின்கிராம சேவையாளரிடமிருந்து இன்று வரை அவரது பிரிவிலேயே குடும்பத்துடன் வசித்து வருகின்றார் என்ற சான்றிதழ், 5ரூபா பெறுமதியான முத்திரை ஏற்கனவே வங்கிக்கணக்கு இருப்பின் அதன் இலக்கம் என்பவற்றுடன் கோப்பாய் பிரதேச செயலகத்தில் தமது பதிவை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது. (சு)

## சான்றிதழ் வழங்கல்

(ஊர்காவற்றுறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் கழங்களின் சம்மேளனப் பிரிவுக்குட்பட்ட பகுதியான காரைநகரில் நடத்தப்பட்ட நடமாடும் பெண்களுக்கான தையல் பயிற்சி நெறியின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் அண்மையில் இடம்பெற்றது.

காரைநகர் இந்துக்கல்லூரி நடராசர் மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவி இயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தி பிரதமவிருந்தினராக கலந்து கொண்டார்.

மேற்படி பயிற்சி நெறியில் பயிற்சி பெற்ற 23 பெண்களுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

(க-75)

## யாழ். அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி, கொழும்பில் நடைபெறவுள்ள எழுதுவினைஞர் தேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களை சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் யாழ். செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

எதிர் வரும் 31 ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு)

## வீடமைப்புதிட்டம்

(வல்வெட்டித்துறை)

காங்கேசன்துறைப் பகுதியில்இருந்து இடம்பெயர்ந்து பொலிகண்டியில் வசித்துவருபவர்களுக்கு உதவும்முகமாக வீடமைப்புத் திட்டங்களை 'கியூடெக்' நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்டயுத்தஅனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்போருக்கே இவ்வீடமைப்புத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தினால் சுமார் 15 குடும்பங்கள் பயன்அடைவர்என்பது குறிப்பிடத்தக்கது.

(த-16)

மாதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
வாந்துறைப் ...



## இன்று ஒரு தகவல்

## எண்ணியவை எண்ணியாங்கு எய்தும் என்பர்

அடர்ந்த காட்டின் மத்தியில் ஒரு நாள் ஒரு வழிப்போக்கன் பயணம் செய்து கொண்டிருந்தான்.

அவன் போகவேண்டிய கிராமம் இந்தக்காட்டுப்பகுதியினைக் கடந்து பயணம் செய்யவேண்டியதாக விருந்தது.

அவ்வழிப்போக்கனின் வாழ்வில் பாழும் வறுமை. அதன் காரணத்தால் அவனது உடல் மெலிந்திருந்தது. வயிற்றுக்குக் கூட உணவு இன்றிய நிலையில் அவனால் மேற்கொண்டு நடக்கவே முடியவில்லை. அவன் தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தான்.

ஆயினும் அவனால் மேற்கொண்டு நடப்பது கடினமாய் இருந்தது. அதனால் அவன் ஓய்வு எடுப்பதற்காக காட்டுக்குள் நின்ற மர நிழலின் கீழ் அமர்ந்தான்.

அவனது கண்கள் பசியினால் தானாகவே உறங்கிப் போயின. அவன் அரைத்தூக்கத்தோடு விழித்துப் பார்த்த போது கரு இருள் சூழ்ந்த காட்டுப்பகுதி மாத்திரம் தெரிந்தது.

அவனது சிந்தனைகள் சிறகு கட்டிப்பறந்தது. இந்த அடர்ந்த காட்டுப்பகுதி ஓர் பூங்காவனமாய் மாறினால் எத்தனை நன்றாகயிருக்கும் என்று எண்ணினான்.

என்ன ஆச்சரியம்! மறுகணமே அடர்ந்த காடுமுழுவதும் எழில் கொஞ்சும் பூங்காவனமாகக் காட்சியளித்தது. ஆச்சரியமடைந்த வழிப்போக்கன் இந்தப்பூஞ்சோலையின் நடுவில் அழகிய வீடு ஒன்றிலிருந்தால் எப்படியிருக்கும் என்று எண்ணினான். அதுவும் எண்ணியமாத்திரத்திலே நடந்தது வீட்டினுள் நுழைந்த வழிப்போக்கன்,

இங்கு எனக்கு ''நிறைய உடைகள் வேண்டும் அது மாத்திரமன்றி பஞ்சு மெத்தைகள் இருக்கவேண்டும். அழகிய மனைவிவேண்டும். நான் இம் எனும் முன் சட்டென்று அதனைச் செய்துமுடிக்கும் ஏவலாளர்கள் வேண்டும். என்னைப்பாதுகாக்கக் காவலாளர் வேண்டும்.'' என பலதையும் நினைத்தான். நினைத்த மாத்திரத்திலே அவை கிடைத்தன.

வழிப் போக்கனுக்கு தன் அதிஸ்டத்தை நினைத்து மிகவும் ஆச்சரியம்.

அவன் அத்தனை இன்ப உபசாரங்களுடன் மெத்தையில் படுத்திருந்தான்.

திடீர் என அவனது எண்ணத்தில் ''இது அடர்ந்த காட்டுப் பகுதி. நான் உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் கொடிய சிங்கம் ஏதாவது வந்து, பூந்தோட்டத்தை அழித்து, காவலாளர்களையும் என்னைச்சுற்றியுள்ளவர்களையும் தாக்கி என்னையும் கொன்றுவிட்டால் என்ன செய்வது நான் எப்படித் தப்புவது'' என்ற சிந்தனை உதித்தது.

அந்தக்கணமே அவன் எண்ணியதுபோல் எல்லாமே நடந்தது. கொடிய சிங்கம் எல்லாவற்றையும் அழித்துக் கொண்டு அவனை நெருங்கி வந்து தாக்கியது. அந்த இடத்திலே அவன் தன் சிந்தையால் விளைந்த தீமையை எண்ணி கதறிய வண்ணம் உயிரிழந்தான.

எண்ணிய எண்ணமெல்லாம் நன்றாக அமையவேண்டும். ஒருவன் மனதின் எண்ணங்கள் தான் அவனை நன்றாக வாழ வைக்கும். எண்ணத்தில் பஞ்சு இருந்தால் வாழ்வில் பஞ்சு இருக்கும். நன்மையான எண்ணங்களினால் விளைபவை நன்மையான செயல்களே. தீமையானஎண்ணங்களினால் விளைபவை தீமையான செயல்களே. வாழ்வின்ஏற்றத்தாழ்விற்கு எண்ணங்களே அடிகோலும். (த)

தென்கச்சி சுவாமிநாதன்

## செஞ்சிலுவை கொடியுடன் வடபகுதி பயணிகள் சேவை அடுத்த வாரம்

## இரண்டு தடவைகள் இடம்பெறும்

(கொழும்பு)

வாரம் இருமுறை 350 பயணிகளுடன் பயணிகள் கப்பல் சேவை இடம்பெறுமென சர்வதேச செஞ்சிலுவை அதிகாரி காமன் பேகர் தெரிவித்துள்ளார்.

பயணிகள் கப்பல் சேவை தொடர்பாகசர்வதேசசெஞ்சிலுவைசங்கம் வழித்துணை வழங்குவதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் சம்மதம் தெரிவித்ததை யடுத்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் சேவைகள் நாயகத்தால் நடத்தப்படுகின்ற போதிலும் கப்பலில் செஞ்சிலுவைச் சங்கக் கொடியேபறக்கவிடப்படும் எனவும் கப்பலின் ஒவ்வொரு பயணத்தின் போதும் சர்வதேச செஞ்சிலுவை பிரதிநிதிகூட பயணம் செய்வார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கப்பல் சேவை பெரும்பாலும் அடுத்தவாரம் ஆரம்பமாகும் என நம்பப்படுகிறது. (ந-2)

## மட்டக்களப்பில் பகிஷ்கரிப்பு பாடசாலை அதிபர் கைதின் எதிரொலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பிரதேச மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இம்மாதம் 16ம்திகதி மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலய அதிபர் எஸ். அகிலேஸ்வரன் கண்டிநாசகாரதடுப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதை கண்டித்தே இப்பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெற்றது.

இதேவேளைமட்டக்களப்பு தொழில்நுட்பக்கல்லூரிவிரிவுரையாளர் எஸ்.தியாகராஜா சமுர்த்தி முகாமையாளர் பி.பத்மநாதன் ஆகியோரும் நாசகாரப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## வடமேல் மாகாணத்தில் 7பேருக்கு எய்ட்ஸ் நோய் வைத்திய வட்டாரங்கள் அதிர்ச்சி

(கொழும்பு)

வட.மேல் மாகாணத்தில் ''எய்ட்ஸ்'' நோய்தொற்றிய ஏழு பேர் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

புத்தளம் மாவட்டத்தில், இடம் பெயர்ந்த மக்கள் வாழ்கின்ற முகாம்களில் சுகாதாரப் பணிமனையினர் மேற்கொண்ட பரிசோதனையின் போதே இவர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நோயாளிகளில் நான்கு பேர் புத்தளத்தையும், ஏனையோர் குருநாகலையும் சேர்ந்தவர்கள்.

இவ் எச். ஐ.வி. தொற்று பாலியல் ரீதியாக ஏற்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

## யுத்த அனர்த்தத்தை அடுத்து அறவழிச் செயற்பாடு மந்தம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம் பெற்றுள்ள யுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து 1979 ம் ஆண்டு முதல் இயங்கி வந்துள்ள உள்ளூர் அரச சார்பற்ற நிறுவன மாகிய அறவழிப் போராட்டக் குழு அதன் செயல் பாடுகளைத் தொடர்வதில் பல்வேறு விதமான நடைமுறைச் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளதாக அதன் தலைவர் வீ ஜீ. தங்கவேல் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் எதிர் நோக்கப்படும் தடைகளை எதிர்கொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகளைமீண்டும் ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந் நிறுவனத்தின் தலைமைச் செயலகம் கைதடி நுணாவிலில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவையாற்ற லயன்ஸ் கழகத்தின் பங்களிப்பு அவசியம்

(தென்மராட்சி)

இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளை அரசாங்கம் முழுமையாக தீர்க்கவில்லை. அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிகவும் வேகம் குறைந்ததாகக் காணப்படுகின்றது. எனவே இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் லயன்ஸ் கழகங்கள் தமது கவனங்களைத் திருப்பவேண்டும். அதற்குரிய சரியான தருணம் இதுவாகும். இடம்பெயர்ந்த மக்களுடைய உண்மையான தேவைகளை இனங்காணக் கூடியவர்கள் அரசசார்பற்ற ...

... களைச் செய்துவைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், தென்மராட்சியில இடம்பெயர்வினால் வடமராட்சியிலுள்ள நலன் பேணும் முகாம்களில் 1400 குடும்பங்கள் தங்கியுள்ளன. இத்தகைய குடும்பங்களுக்கு லயன்ஸ் கழகங்கள் தமது சேவைகளை வழங்க வேண்டும். அம்மக்களின் சுகாதாரத் தேவைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேலும் லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்கள் மத்தியில் புரிந்துணர்வும், ஐக்கியமும் நிலவவேண்டும். நாம் ...

## நல்லூரில் மண்ணெண்ணெய் விநியோகம்

(கல்வியங்காடு)

நல்லூர் பிரதேச செலாளர் பிரிவில் கடமையாற்றும் ...

## வீதியால் சென்ற பெண் மீது மனநோயாளி கற்களை வீசினார்

## பெருமாள்கோவில்பகுதியில்சம்பவம்

(யாழ்ப்பாணம்)

## வீதியால் சென்ற பெண் மீது மனநோயாளி கற்களை வீசினார்

### பெருமாள்கோவில்பகுதியில்சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கலட்டிப் பகுதியில் இருந்து பெருமாள் கோவில் பகுதிக்கு சென்ற பெண் ஒருவர் மீது மனநோயாளி ஒருவர் கற்கள் வீசியதால் ஜெயலச்சுமிஎன்ற பெண் தலையில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

53வயதான இப்பெண்மணி நேற்று முன்தினம் காலை வேலைத்தளம் நோக்கி சென்று கொண்டிருந்த போதே வீதியில் நின்றமனநோயாளி தம்மீது கற்களை வீசியதாக பிரஸ்தாபப்பெண் தெரிவித்துள்ளார். (க-12)

## வடபகுதிக் கப்பல் சேவை விரைவில் சீராகும்

### டக்ளஸ் எம். பி. நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான கப்பல் போக்கு வரத்துச் சேவை விரைவில் சீராகுமென ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவனாந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ். திருமலை கப்பல் போக்கு வரத்துத் தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சரத்அமுனுகமவுடனான சந்திப்பின் பின்னர் இவ் உறுதி மொழியை அவர் தெரிவித்துள்ளார். (ந-2)

## யாழ். மனித உரிமை ஆணையகத்தில் போதியளவு ஆளணி இல்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்திலுள்ள மனிதஉரிமைகள்ஆணையகப் பணிமனையில் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் போதியஆளணியினர் இல்லாமல் இருப்பதாகத் தெரியவருகிறது.

இதை ஆய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் விகிதர் பதவிகளுக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

மனித உரிமைகள் ஆணையகத்தில் தற்போது இணைப்பாளர் ஒருவர் மட்டுமே பணியில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (வ-77)

செய்வதில் லயன்ஸ் கழகங்கள் தமது கவனங்களைத் திருப்பவேண்டும். அதற்குரிய சரியான தருணம் இதுவாகும். இடம்பெயர்ந்த மக்களுடைய உண்மையான தேவைகளை இனங்காணக் கூடியவர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களேயாகும்.

இவ்வாறு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி மாவட்டத்தின் வடபிராந்தியத் தலைவர், உழைக்கும் மகளிர் நிறுவனத்தின் சத்துணவுக்கூடத்தில் அண்மையில் நடைபெற்ற வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவத்தில் பிரதம அதிதியாகப்பங்கு கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

கழகத்தின் புதிய தலைவர் லயன்ஸ் என். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிராந்தியத் தலைவர் புதிய நிர்வாகிகளுக்கான பதவிப்பிரமாணங்

தமது சேவைகளை வழங்க வேண்டும். அம்மக்களின் சுகாதாரத் தேவைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேலும் லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்கள் மத்தியில் புரிந்துணர்வும், ஐக்கியமும் நிலவவேண்டும். நாம் புரிந்துணர்வுடன் செயற்பட்டால் எம்மத்தியில் பிரச்சினைகள் இன்றிச் சேவை செய்யக் கூடியதாகவிருக்கும். நாம் இதய சுத்தியுடன் சேவை ஆற்றுவோமாயின் எமது சேவைகள் நிச்சயம் அங்கீகரிக்கப்படும் எனக் குறிப்பிட்டார். (க-77)

(க-77)

## நல்லூரில் மண்ணெண்ணெய் விநியோகம்

(கல்வியங்காடு)

நல்லூர் பிரதேச செலாளர் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும், பயிலுநர் பணியில் இருப்பவர்களிற்கும் 4 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

இவ்விநியோகமானது நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-54)

## தேயிலையின் விலையோ அதிகம் தரமோ குறைவு; மக்களோ அதிருப்தி

(கோப்பாய்)

தேயிலையின் விலை யாழ்ப்பாண மாவட்டத்தில் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படும் தேயிலையின் விலைக்கேற்ற தரமான தேயிலைகள் கிடைப்பதில்லையென்றும், தேயிலையை பாவனைக்குட்படுத்தும் போது சுவையற்றதாகவும், ஒருவகை மணம் உடையதாகவும் காணப்படுவதாக பாவனையாளர்களிடையே பெரும் அதிருப்தி நிலவுகிறது. (த-79)

## விளையாட்டுப் போட்டி

(மானிப்பாய்)

நவாலி தென்னிந்திய திருச்சபை பாலர் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி இன்று 29 ஆம் திகதி சனிக்கிழமைபி.ப. 2 மணிக்குதிருச்சபை தேவாலய முன்றலில் இடம் பெறவுள்ளது.

இவ் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை அதிபர் சி. நாகையா கலந்து கொள்வார். (சு1-20)

## தொலைபேசி செயலிழப்பு

(வவுனியா)

வவுனியாவிலிருந்து வெளியிடங்களுக்கான தொலைபேசித்தொடர்பு நேற்று பல மணித்தியாலங்கள் தடைப்பட்டிருந்தன.

தொழில்நுட்பக்கோளாறே தொலைபேசி தடைப்பட்டமைக்கு காரணம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உணவு தயாரிப்பவர், கையாள்பவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு நாவலர் கலாசாரமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமை தாங்குவார். (ஈ)

## மேற்கு வங்கத்தில் மோதல் 11 பேர்பலி; பலர்காயம்

(புதுடில்லி)

மேற்கு வங்காளத்தில் பீர்போமாவட்டத்தில் சுயாபூரில் நடந்த அரசியல் மோதல்களில் 11 பேர் உயிரிழந்தனர். பலர் சாயமுற்றார்கள்.

ஆயுதம் ஏந்திய கம்யூனிஸ் கட்சி மக்கள் ஆதரவாளர்களும் திருநாமல் காங்கிரஸ் ஆதரவாளர்களும் வயல்நிலம் சம்பந்தமான பிரச்சினையில் சண்டை இட்டதாத சொல்லப்படுகிறது, விசேடபிரிவினர் பொலிஸ் ஸ்தலம் நோக்கி விரைந்துள்ளனர். (து)

## நேபாளத்தில் விமானவிபத்து 3குழந்தைகள் உட்பட 25பேர் பலி

[லண்டன்]

நேபாளத்தில் இரட்டை இயந்திரம் கொண்ட சிறிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் மூன்று குழந்தைகள் உட்பட 25 பேர் பலியாகி உள்ளனர்.

மேற்படி விமானம் சியாமில் இருந்து புறப்பட்டு நேபாளத்திற்கு மேற்கில் உள்ள டன்காட் விமானத்தளத்தில் தரையிரங்க முற்பட்ட போதே இவ்அனர்த்தம் நிகழ்ந்தது.

விபத்தில் கொல்லப் பட்ட அனைவரும் நேபாள நாட்டவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ந-2)

## பங்களாதேஷில் படகு மூழ்கியதில் 50 பேர் பலி; பலரைக் காணவில்லை

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்கா அருகே பூடிகங்காவில் படகு ஒன்று மூழ்கியதில் 50 பேர் உயிர் இழந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இந்தப்படகு இரு கலங்களுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

படகிலிருந்த பயணிகளில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் நீரில்குதித்து விட்டார்கள். காணாமல் போனவர்களைத்தேடும் பணி முழுவீச்சில் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. (து)

## தேயிலைக்கு நியாயவிலை கோரி மறியல் போராட்டம் நடத்தியவர்கள் ஊட்டியில் கைது செய்யப்பட்டனர்

உலக தரிசனம்

(சென்னை)

இந்தியாவின் ஊட்டிக்கு அருகே எலகலல்லி பகுதிகளில் தேயிலை சாகுபடியாளர்கள் சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டதை அடுத்து பொலிஸார் தடியடிப்பிரயோகமும் கண்ணீர் புகையும் அடித்தனர்.

பச்சைத் தேயிலைக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கோரி அவர்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

இது தொடர்பாகப் பல பெண்கள் உட்பட சுமார் 300 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்த 35 பேரும் இதில் அடங்குவர்.

இவர்களில் சிலர் இப்பொழுது குன்னூர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இதேவேளை தடைப்பட்டிருந்த பஸ்போக்குவரத்து தொடங்கிவிட்டதென்றும் புகையிரதங்கள் ஓடவில்லையென்று அப்பகுதியில் காவல் படையினர் கூடுதலாக முகாமிட்டிருக்கின்றனரென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## பிஜியில் கிளர்ச்சித் தலைவர் கைது நாடுமுழுவதும் பதற்றநிலை

### 350 கிளர்ச்சியாளர் கைது

(சுபா)

பிஜிநாட்டில் கிளர்ச்சித் தலைவர்ஜோர்ச்பெயிட்கைது செய்யப்பட்டதை அடுத்து நாடு முழுவதும் பதற்றநிலை உருவாகியுள்ளது.

லபாஸா நகரில் 50 இந்திய வம்சாவழியின கிளர்ச்சிக்காரர்கள் சிலமணி நேரம் பிணையாளிகளாகப் பிடித்து வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

ஏ.கே. எயர் நிறுவன விமானம் ஒன்றைக் கைப்பற்றிய புரட்சியாளர்கள் இரண்டு விமானஓட்டிகளையும் பிணையாட்களாகப் பிடித்துவைத்திருந்தனர்.

லபாஸாநகரில் துப்பாக்கி ஏந்திய 50 பேர் தெருக்களில் சுற்றித்திரிவதாகவும்கண்மூடிதனமாகச்சுட்டு கடைகளைச் சூறையாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மக்களை வீடுகளுக்குள்ளேயே இருக்கும்படி பணிக்கப்பட்டுள்ளனர்;

லபாஸா நகரில் இந்திய வம்சாவழியினர் அதிகமாக வாழ்ந்துவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தலைநகர் சுபாவிற்கு அருகே பள்ளிமுகாமொன்றில் திடீர் சோதனை நடத்திய பொலிஸார் 370 கிளர்ச்சிக்காரர்களை கைது செய்துள்ளாதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன; (து)

## பாகிஸ்தானிய பயிற்சி பெற்ற 3000தீவிரவாதிகள் ஜம்முகாஷ்மீருக்குள் பிரவேசிப்பர்

(புதுடில்லி)

பாகிஸ்தானிலுள்ள இராணுவ முகாங்களில் 3000தீவிரவாதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவர்கள் ஜம்முகாஷ்மீர் மாநிலத்துக்குள் பிரவேசிப்பதற்காகப் பயிற்சி செய்து வருவதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலுமாக தீவிரவாதிகளுக்கும் பயிற்சிஅளிக்கும்94 இராணுவ முகாங்கள் இருப்பதாகவும் இந்தியபாதுகாப்பு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்;

இந்திய நாடாளுமன்றத்தில் கேள்வியொன்றுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கையில் பாகிஸ்தானிலுள்ள முகாங்களில் 3000தீவிரவாதிகள் பயிற்சி பெறும் விடையத்தைக் குறிப்பிட்டார்; (து)

## காமராஜருக்கு சிலைவைத்தவர்கள் சிறையில்

மதுரையில் முன் அனுமதி இன்றி காமராஜர் சிலையை நிறுவிய 12 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்

செலூர் மேம்பாலம் அருகே நிறுவப்பட்ட இந்தச்சிலையை பொலிஸார் அகற்றினார்கள்;

## விண்வெளிக் கலம் இணைந்தது

(மஸ்கோ)

ரஷ்யா விண்வெளி வீரர்களின் தங்கும் விடுதியை சர்வதேச விண்வெளிநிலையத்துடன் இணைத்துக்கொண்டது.

உலக வரலாற்றில் மிகப் பெரிய விண்வெளிக்கப்பலாக இது அமைந்துள்ளது.

இதனை நிர்மானிப்பதற்குப் பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது;

## விண்ணில் அற்புத நிகழ்வு விஞ்ஞானிகள் மத்தியில் மகிழ்ச்சி

(மொஸ்கோ)

விண்ணில் ஏற்கனவே சஞ்சாரம் செய்து கொண்டிருந்த சர்வதேச விண்கலத்துடன் ரஷ்யா அனுப்பிய விண்கலம் இணைந்து கொண்ட வரலாற்று நிகழ்வு ஒன்று அண்மையில் அரங்கேறியுள்ளது;

பெரும் பொருள் செலவில் ரஷ்யா தயாரித்த இவ்விண்கலமானது மிகப் பெரிய விண்வெளிக் கப்பல் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நிகழ்வு மூலம் ரஷ்யாவின் விண்வெளி ஆய்வு முன்னேற்றம் மேலும் ஒரு படி உயர்ந்துள்ளதாக சர்வதேச விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க)

## இடதுசாரி நாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்த ஜப்பான் முயற்சி

(ரோக்கியோ)

ஜப்பானிய பிரதமர் ஜொசிறோ மோறிவடகொரியாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்து வதற்கு தன்னாலானவை யெல்லாம் செய்யப் போவதாக உறுதி அளித்துள்ளார்.

அதே வேளை ரஷ்யாவுடனும் சீனாவுடனும் உறவுகளைப்பலப்படுத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளார். ஜப்பானிய பாராளு மன்றத்தில் தனது கொள்கைத் திட்டத்தை விளக்கி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அண்மையில் நடந்த உச்சி மகா நாடொன்றில் தரப்பட்ட பெறுபேறுகளைக் கொண்டு ஆக்க பூர்வமான சுதந்திரமான இராஜதந்திரம் கடைப்பிடிக்கப்படும் என்று குறிப்பிட்டார். (து)

## பிலிப்பைன்சில் வேலை நிறுத்தம்; புகையிரத ஊழியர் இடை நிறுத்தம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் வேலை நிறுத்தம் மேற்கொண்ட நூற்றுக்கணக்கான புகையிரத ஊழியர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதே சமயம் 200 புகையிரத ஊழியர்களை சேவையிலிருந்து அரசு தற்காகலிமாக இடை நிறுத்தியுள்ளது.

வேலை நிறுத்த ஊழியர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தடியடிப் பிரயோகம் மற்றும் தண்ணீர் பாய்ச்சல் காரணமாக நூற்றுக் கணக்கான ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் புகையிரத ஊழியர்கள் சம்பள உயர்வுகோரி மகஜர் முன்வைத்து கடந்த சில தினங்களாக வேலை நிறுத்தம் மேற்கொண்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

## இடம் பெயர்ந்தோர் நலன் பேண பிரதேச சபைத் தலைவர்களுக்கு பணிப்பு

(புலோலி)

வடமராட்சி வலிகாமம் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள அகதிகளின் சுகாதார குடி நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய அந்தந்தப் பிரதேச சபைகளின் தலைவர்களை நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே; வி; குகேந்திரன் (ஜெகன்) கேட்டுள்ளார்.

அத்துடன் இடம்பெயர்ந்து இன்னல்களை அனுபவித்து வருவோர் எதிர் கொள்ளும் அவலம் குறித்து ஜனாதிபதியுடனும் இவர் தொடர்பு கொள்ள உள்ளதாகதெரிவிக்கப்படுகிறது; (க-52)

## சென்னையில் கடற்றொழிலாளர் கறுப்புக்கொடி ஏந்திப் போரட்டாம்

(சென்னை)

சென்னை நகரின் பல்வேறு இடங்களிலும்கடற்றொழிலாளர்கள் கறுப்புக்கொடிகளை ஏந்திய வாறு போரட்டம் நடத்தியுள்ளனர்;

60 இற்கும் மேற்பட்ட இடங்களில் இப் போரட்டம் நடை பெற்ற தாகவும் சாதாரண வாழ்க்கை ஸ்தபிதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வட சென்னை மின்நிலையம் உட்பட மற்றும் மின் நிலையங்கள் வாரியத்தில் வேலை பார்க்கும்358 மீனவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை யடுத்து. அந்த மீனவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து அகில இந்திய மீனவர் சங்கம் போராட்டம் நடத்தி வருகிறது; (து)

## இடம் பெயர்ந்த மாணவருக்கு விசேட பஸ் சேவை

[இணுவில்]

நடைபெறவுள்ளக:பொ.த (உயர்தரம்) பரீட்சையை முன்னிட்டு தென்மராட்சி மற்றும்இடம்பெயர்ந்தமாணவருக்கென விசேட பஸ் போக்கு வரத்துச் சேவை இடம் பெறவுள்ளது;

கொடிகாமம், யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் பகுதிகளிலிருந்து காலை, மாலை என இரு கட்டங்களாக இச்சேவை இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது; (க-49)

நாவாந்துறைப் படிப்பகம்

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும் மாறா நீர் வையக்கு அணி

— குறள்

# வலம்புரி

## புலம் பெயரும வாழ்க்கை

வலி வடக்கு மக்கள் 90ல் ஒரு புலப் பெயர்வைக் கண்டனர். ஒட்டு மொத்தமாக வலிகாமம், யாழ்ப்பாணம் ஏனைய பகுதி வாழ் மக்கள் அனைவரும் 95 ல் தென்மராட்சிக்குப் புலம் பெயர்ந்தனர். உடமைகள் இழந்தனர். சேமிப்புப் பழக்கம் இரத்தத்தோடு ஊறியதால் 2000 ஆண்டு வரை சிறிது தழைத்தனர் மக்கள். இன்றைக்கு தென்மராட்சி மக்கள் உயிர்பலி, உடமைகள் அழிவு என்றெல்லாம் பட்ட இன்னல் சொல்லில் அடங்கா. அவர்களின் வாழ்வியல் பாங்கும், பின்னணியும் மா, பலா, தென்னை, விவசாயம் என்பவற்றில்தங்கியிருந்தது. அவற்றை இழந்து படுகின்ற துன்பம் சொல்லில் அடங்கா. இன்றைக்கு இந்த நாட்டை ஆளும் பேரினவாதக் கட்சிகள் மாறி மாறி ஆட்சிக் கதிரையில் கண் வைக்கிறார்களன்றி தமிழர்களின் இன்னலைத் துடைக்க வழி சமைக்கிறார்களில்லை. அவர்களது அரசியற் சதுரங்கத்திற்கு வாய்த்தவர்கள் தமிழர்கள் தான்.

ஞானம் பிறக்கின்ற வேளை யுத்தத்தால் இனப் பிரச்சினை தீராது என்பார்கள். சரிபேச்சுவார்த்தையே மார்க்கம் என்றால் அதுவும் மூடு மந்திரமாகி விடுகிறது. இந் நிலையில் புலம் பெயரும் வாழ்க்கை தான் தொடர வேண்டுமா?. இன்னுமொரு சூழ் நிலையில் நாம் புலம் பெயருவது மீண்டும் அபகரிக்கப்பட்ட வலி வடக்கு மண்ணுக்கா?. அதன் பின் வங்காள விரிகுடாவில் சங்கமமாகி செத்து மடிவதா?

நாகரிகமான அரசியல் வாழ்வு கண்ட மேற்குலகுகள் பேரினவாத, மதவாத வாதத்திற்கு ஒவ்வாத அரசியல் நகர்வுகளைக் கண்டும் காணாதது போல் இருக்கிறார்களா? அன்றி நீதியை மறந்து கண்களை இறுக மூடிக்கொண்டார்களா?.

எங்களுக்கான விடிவு எவரால் எந்த ரூபத்தில் வரப் போகின்றது என அங்கலாய்ப்பதைக்காண பரிதாபமாக விருக்கிறது. மீள் தன்மை இல்லாத் துன்பச் சுமையைக் கண்ட மக்கள் உள்ளத் தெளி விழந்து மன நோயாளர்களாக மாறுகின்றனர். இந்த அவலம் உலகில் எங்கும் நிகழ்வதில்லையே. பிற நாடுகளில் தலை தூக்கிய பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட்டுள்ளன, தீர்க்கப்படுகின்றன. எங்கள் நாட்டில் தான் அரசியல் இசைத் தட்டுக்களை மாறி மாறிப் போட்டு ஊழிக் கூத்து ஆடுகின்றார்கள். தமிழன் ஏமாளி என எண்ணிக் கொக்கரிக்கிறார்கள் போலும்.

அன்புடன் ஆசிரியர்

★ செம்மணி புதைகுழி விவகாரம்

# விசாரணைக் கமிஷன் நிறுவும் உறுதிமொழிக்கு; நடந்ததென்ன? 6 மாதமாகியும் அரசு மௌனம்!

**யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாக 1998 யூலை 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி நியமன எம். பி. நீலன் திருச்செல்வம் ஆற்றிய உரை இங்குபிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆ-ர்**

செம்மணியில் உள்ளதாகக் கருதப்படும் பரந்து பட்ட புதைகுழி குறித்துபுலனாய்வு செய்ய வேண்டும் என்று மனிதஉரிமைஆணையாளருக்கு எம்.சிவசிதம்பரமும் மற்றவர்களும் கோரிக்கை வைத்துள்ளனர். புலனாய்வு செய்வது குறித்து மனித உரிமை ஆணையாளரும் ஆராய்ந்து வருவதாகசெய்திகள் தெரிவிக்கின்றன அடிப்படைஉரிமைமீறல்கள்குறித்து புலனாய்வு செய்யும் அதிகாரத்தை சட்டம் (பிரிவு 10B) மனித உரிமை ஆணையாளருக்கு அளிக்கிறது தன்னிச்சையான, சட்டமுறையற்ற படுகொலைகள் அரசமைப்புச் சட்டத்தின் 13(4) வதுபிரிவை மீறுகின்றன. மனித உரிமை ஆணையாளர் தனது வரம்புக்குள் நின்றுசெயற்பட்டு இந்த புகார்கள் குறித்து விசாரணை செய்வார்

இங்கு எழும் கேள்வி என்னவென்றால், சிக்கலான, முக்கியத்துவம் வாய்ந்த இப்பணியை மேற்கொள்ள போதுமான புலனாய்வு அதிகாரங்கள் ஆணையாளருக்கு இருக்கின்றதா என்பது தான். வாய் மொழியாகவும் எழுத்து மூலமாகவும் உள்ள ஆவணங்களைப் பெறவும் தேவைப் படுபவர்களை விசாரிக்கவும் முடியும் என்ற சட்டப் பிரிவு 18 தெளிவாகக் கூறுகிறது. இந்த விஷயத்தில் சோமரத்ன ராஜபக்ஷவை கோள்விகேட்கவு விசாரிக்கவும் முடியும். சட்டப் பிரிவு 18 (1) (C) யின் படிஎந்தநபரிடம் இருந்தும்அவர்வசம் ஆவணங்களையோ வேறு பொருள்களையோ ஆணையாளரிடம் சமர்பிக்கச் செய்யமுடியும் மிகவும் விரிவானதாகத் தோன்றும் இந்த அதிகாரங்களைசட்டப்பிரிவு 11 (H) உடன் இணைத்துப் பார்க்கும்போது எந்த புலனாய்வையும் நடத்தும் கையில் பரந்த அதிகாரத்தை ஆணையாளருக்கு அளிக்கிறது

புதைக்கப்பட்ட இடங்களை கண்டறிவதும் தொடர்ந்து அவற்றைத் தோண்டுவதும் மிகவும் சிக்கலானது. மற்றும் இவை முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதனால், இந்த விஷயத்தில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து உள்நாட்டு, மற்றும் அமைப்புக்களும் பரிந்துரைந்துள்ளனர்.

சிவில் உரிமைகள் இயக்கத்தின் செயலாளர் சூர்யா விக்கிரமசிங்க 1998 ஜூலை 2ம் திகதி வெளியிட்ட அறிக்கையில், தனித்தனியாக புதைக்கப்பட்டவர்களைத் தோண்டி எடுப்பதைவிட, ஒட்டுமொத்தமாக புதைக்கப்பட்ட உடல்களைத் தோண்டி எடுப்பதில் பல தொழில் நுட்ப சிக்கல்கள் உள்ளன என்று கூறியுள்ளார்.

"மிகவும் சிறப்பான வகையில்இப் பணியைச்செய்தால், புதைக்கப்பட்டவர்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் யார்? அவர்கள் எப்படி அங்கு கொண்டு வரப்பட்டார்கள்? என்பதை அறிய முடியும். அத்துடன் மிக முக்கியமான ஆதாரங்கள் அழிந்து போவதையும் தடுக்கலாம்" என்றார்.

இதே கருத்தை தான்

புதைக்கப்பட்டவர்களைத் தோண்டவும், எலும்புகளை பரிசோதனை செய்யவும் மாதிரி விதி முறைகளை ஐக்கிய நாடுகள் சபை வகுத்துள்ளது.

குற்றம் நடந்த இடத்தைத் தேடுவதற்கு எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ளப் படுகிறதோ அதே அக்கறையுடன் புதைக்கப்பட்டவர்களைத் தோண்டி எடுக்கையிலும் செயற்பட வேண்டும். முதன்மைப் புலனாய்வாளருக்கும் ஆலோசனை வழங்கும் மானிடவியலாளர் அல்லது தொல்பொருள் ஆய்வாளர்களுக்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்த வேண்டும். தடய அறிவியல்தொடர்பான மானிடவியல் நுட்பங்களில் பயிற்சி இல்லாத ஊழியர்களைத்தான் புதைக்கப் பட்டவர்களைத் தோண்டுவதற்கு அதிகாரிகள் பயன் படுத்துகின்றனர்.

இதன் காரணமாக மதிப்பிட முடியாத தகவல்களை இழப்பது மட்டு மன்றி பொய்யான தகவல்களை சிலநேரங்களில் உருவாக்கப் படுகின்றன. பயிற்சி இல்லாத நபர்களைக் கொண்டு புதைக்கப் பட்டவர்களைத் தோண்டுவதை தடை செய்ய வேண்டும். மானிட வியலாளரின் மேற்பார்வையில் தான் புதைக்கப்பட்டவர்கள் தோண்டப்பட வேண்டும்.

தடய அறிவியல், மானிடவியல் மிகப் பெரியமுன்னேற்றங்களை அடைந்துள்ளன. ஆர்ஜென்டினா, எல்சல்வடோர்குவாட்டமாலா, ஈராக் எத்தியோப்பியா, முன்னாள் யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் கூட்டம் கூட்டமாக புதைக்கப்பட்டவர்களைத் தோண்டி எடுத்த அனுபவம். மூலம் கிடைத்த அறிவும், திறமையும். உள்ளன தோண்டி எடுப்பதற்கான நடைமுறைக்கு உதவ இறந்த சடல அறிவியல் மானிடவியலாளர்கள் உள்ளனர். உள்ளூர் நபர்களுக்கு அவர்களுக்கு அவர்கள் பயிற்சி அளிக்க முடியும்.

உடல்களைத் தோண்டி எடுப்பதிலும்புலனாய்வு செய்வதிலும், மூன்று கட்டங்கள் உள்ளன. புதைக்கப்பட்ட இடத்தைக் கையகப்படுத்துவது, கிருஷாந்தி குமாரசாமி வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளைப்பதிவு செய்வது, சரியான இடத்தை அடையாளம் காண்பதில் அவர்களின் உத்துழைப்பைப் பெறுவது ஆகியவற்றுக்காக இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

இத்துடன் ஐ. நா. சபையின் விதிமுறைகளும் மூன்று நிலைகளைக் கொண்டிருக்கின்றன.

முதலாவதாக புதைக்கப் பட்ட உடல்களை மருத்துவ பரிசோதனை செய்வதற்கு முன்பாகதொகுக்கவேண்டிய புள்ளி விபரங்கள் இறந்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை விசாரித்து கடைசியாக அவர்களைப்பார்த்தது எப்போது? இறப்பதற்கு முன்பதாக அவர்களைப் பார்த்தவர்களின் சாட்சியம் ஆகியவை இதில் முக்கியமாக அடங்கும்.

இரண்டாவதாக தொல்லியல் ஆய்வு, புதைக்கப்பட்ட இடங்களைக் கண்டறிவதும், தோண்டுவதும் இதில்அடங்கும். புதைக்கப்பட்ட உண்மையான இடங்களை எப்படிக்கண்டறிவது என்பது குறித்தும் ஐ.நா. விதிமுறை கூறுகிறது. மதிப்பிட முடியாத தகவல்களை இழக்க நேரிடும் என்பதால் பயிற்சி இல்லாதவர்களை வைத்து புதைக்கப்பட்டவர்களைத் தோண்டி எடுப்பது தடை செய்யப்பட வேண்டும்.

அதே காரணத்துக்காகவே தோண்டும் வேலை நடைபெறும் இடத்தில் ஒவ்வொரு நாளும் வேலை தொடங்கும் முன்பும், முடிந்த பிறகும் அந்தப்பகுதியைப் புகைப்படம் எடுக்கவேண்டும். அதனால் அந்தப் பகுதியில் தோண்டும்வேலை சம்பந்தப் படாத வேறுகாரணங்களுக்காக ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதனைக் கண்டறிய உதவும் இட ஆதாரங்களைப் பொறுத்தவரை தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும். தோண்டும் இடங்களின் வரைபடங்கள் தயார் செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொன்றுக்கும், தனித் தனி எண் அளிக்கப்பட வேண்டும். ஒரு பகுதி கூட மிச்சம் மீதிவைக்காமல் சம்பந்தப்பட்ட இடங்கள் நன்கு தோண்டப்பட வேண்டும். புகைப்படங்கள் எடுக்கப்படவேண்டும். குறிப்புகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். தோண்டி எடுக்கப்படும் எலும்புக் கூடுகள் ''எக்ஸ்ரே'' எடுக்கப்பட வேண்டும். மேலும் எலும்பு முறிவுகள், அறுவைச்சிகிச்சை காரணமாக ஏற்படும் விளைவுகள் குறித்தெல்லாம் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு சோதனைக்குள்ளாக்கப்பட்ட எலும்புக்கூட்டின்வயது, பால், இனம், சமுக நிலை ஆகியவற்றைஅறிந்து கொள்ள முடியும். நோய்காரணமாக ஏற்படும் மாற்றங்கள் அதிர்ச்சிமற்றும்வளர்ச்சி, கோளாறுகள் ஆகியவை குறித்த ஆதாரங்களும், அடையாளம் காண உதவும் சில ஆய்வு கூடங்கள் டி.என்.ஏ பரிசோதனையும் மேற்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் காணமல் போனவர்கள் பற்றிய விசாரணை குறித்தும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. 1997 டிசம்பரில் காணாமல் போனவர்கள் குறித்து விசாரணை செய்ய கமிஷன் அமைக்கப்படும் என்று உறவினர்களுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டது. ஆறுமாதங்கள் கடந்தும் இது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சகத்தின் விசாரணைக்குழு ஒன்று மிகச்சிலவற்றைப்பற்றி கண்டுபிடித்து விட்டதாகக் கூறப்படுகிறது. அக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட வேண்டும். ஆயினும் அத்தகைய குழுக்கள் போதுமான மாற்று அல்ல; மனோகரிமுத்தேட்டுவேகமக கமிஷனின் ஆய்வு வரம்பு

## தர்மிஷா

களை விரிவு படுத்துவது சரியாக இருக்காது என்று குடியுரிமை இயக்கம் கூடக்கூறியிருக்கிறது.

பலியானவர் யாராக இருந்தாலும் சரி, அதற்குக் காரணமானவர் யாராக இருந்தாலும் சட்டப்படி நடவடிகை எடுக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் மீறப்படும்போது அதற்குக்காரணமானவர்களைப் பொறுப்பேற்கவைக்கும் முயற்சியில் ஒரு மைக்கல்லாக கிருஷாந்தி குமாரசாமி வழக்குத் திகழ்கிறது. செம்மணி விடயத்தில் பாரபட்சமற்ற, கோர்ந்த ஆய்வு நடத்துவது இன்றியமையாததாகும். அப்படிப்பட்ட ஒரு விசாரணையை மனித உரிமை ஆணையம் நடத்த அரசாங்கம் எல்லா உதவிகளையும் செய்யவேண்டும். என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

# நீதிமன்றங்கள் இல்லையென்றால் குற்றமற்றவர்கள் கைதியாகவேகருதப்படுவர்

நீதிமன்றங்கள் இங்கு இயங்கவில்லை என்றால் குற்றமற்ற பலரும் தொடர்ந்தும் கைதிகளாகவே காணப்படுவர்.

இவ்வாறு நீதிபதியொருவர் அண்மையில் பத்திரிகையாளரை சந்தித்த போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கைதானோர் நீதியின் முன் நிறுத்தப்படும் போது எப்பக்கமும் சாராது தீர்ப்பளிக்கப்படுவதலும். நீதிமன்ற செயற்பாடுகளினாலும் கைதாவோர் மேலும் துன்புறுத்தப் படாமல் பாதுகாக்கப்பட்டுவருகின்றதுடன், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இடம்பெறும் கண்மூடித்தனமாக ஓரளவு குறைக்க கூடிய வாய்புகள் காணப்படுவதாகவு தெரிவித்தார். (க-12)

## சம்பள உயர்வு கோரி ரயில்வே ஊழியர்கள் அடையாளவேலை நிறுத்தம்

(கொழும்பு)

சகல அரசாங்க ஊழியர்களுக்கும் 3000 ரூபா சம்பள உயர்வுவழங்கக்கோரி நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஒரு நாள் வேலை நிறுத்தத்தை ரெயில்வே ஊழியர்கள் மேற்கொண்டுள்ளனர்,

இதனால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன. ரயில் சேவையை வழமையாக நடத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுத்திருப்பதாக போக்கு வரத்து அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்தார்.

பிரயாணிகளின் நலனை முன்னிட்டு மேலதிக பஸ் சேவை சபை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் பௌசி மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் மாலை மூன்று ரெயில்வே ஊழியர்கள் தாக்கப்பட்டதாகவும் அவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# வ.பி.போ.ச. ஊழியருக்கு இடர்கால கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்

## டக்ளஸிடம் சொக்கலிங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு கடந்த நான்கு வருடங்களாக வழங்கப்படாது உள்ளது. போக்கு வரத்து சபை ஊழியர்கள் இரவு நேரங்களில் தமது உயிரை துச்சமென மதித்து இராணுவ முகாம்களில் சுங்கியிருந்து தமது சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே இவர்களது இடர்காலக் கொடுப்பனவை வழங்குவதற்கு ஆவன செய்யப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் எஸ். வி. சொக்கலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஈ.பி.டி.பி. காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற திணைக்கள தலைவர்களின் கூட்டத்திலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அண்மைக்கால அனர்த்தங்களினால் சுமார் 25பஸ் வண்டிகள் பாவனைக்கு உதவாத வகையில் கோண்டாவில் சாலையில் முடங்கிக் கிடக்கிறது.

இதனைவிட மேலும் 26 பஸ் வண்டிகள் திருத்தத்திற்காக விடப்பட்டுள்ளது. 1999 டிசெம்பர் மாதத்திற்குப் பின் எந்தவிதமான உதிரிப்பாகங்களும் எமக்குக் கிடைக்கவில்லை. எனவே இவற்றிற்குரிய உதிரிப்பாகங்களை எடுத்து வருவதற்கு உதவுமாறு அவர் வலியுறுத்திக் கோரியுள்ளார்.

தற்போது பிரயாணிகளின் நெருக்கடியான பிரயாணத்தை நிவர்த்தி செய்ய 'சி' வர்க்க பஸ் வண்டிகள் எட்டும், 'பி' வர்க்க பஸ் வண்டிகள் பதினைந்தும் தேவைப்படுவதால் அவற்றைப் பெற்றுத் தருமாறும் வ.பி.போ.ச. கோண்டாவில் சாலைக்கு ஒரு லேத் மெசினும் பாரம் தூக்கி ஒன்றும் எஞ்சின்வேலை செய்வதற்குரிய கருவிகளையும் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

### வவுனியா...

கல் ஆலடிப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து அங்கு தேடுதல் நடவடிக்கையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் ஈடுபட்டிருந்தபோதும் இச்செய்தி எழுதும் வரை எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. [வ)

### சிற்றி ஒவ்...

மயிலும் தெரிவித்துள்ளார்:

நேற்றுத் திருமலையில் இருந்து பருத்தித்துறைநோக்கிப் புறப்பட்ட இந்தக் கப்பலில் வவுனியாவில் இருந்த 41 அகதிகளும் இலவசமாக ஏற்றிவரப்பட்டுள்ளனர்.

41அகதிகளுக்கான பயணக் கட்டணத்தை அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் நாயகம் கப்பல்உரிமையாளருக்கு வழங்குவாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### படகு கவிழ்ந்து...

மூலம் சென்ற அகதிகளே படகு கவிழ்ந்ததில் உயிரிழந்துள்ளனர்.

25 ஆம் திகதி தமிழகம் சென்ற அகதிகள் இவர்களின் சடலங்களை கடலில் பார்த்ததாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (ந-7)

### பொதுத்...

தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளர்தயானந்த திஸநாயக்காவை ஐ.தே. கட்சிதூதுக் குழு கேட்டுக் கொண்டுள்ளது. கள்ளவாக்கு அட்டைகள் பிடிபட்டது தொடர்பான ஒலிப்பதிவு நாடா ஒன்றும் எம்மிடம் இருப்பதாகவும் இத் தூதுக்குழுவினர் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளனர், (வ)

### பலியானோர்...

என்பவர்களுடன் மற்றும் முப்பது வயது மதிக்கத்தக்க மூவரின் சடலங்களும் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

### காயமடைந்தோர்...

பிரசன்னா [வயது 17], ஜானக [வயது19], சிஜிந்தன் [வயது 14] பிரதீபன் (வயது 14) சித்திரவேல் [வயது 36]

இவர்கள் அனைவரும் வவுனியா தோணிக்கல் ஆலடிப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

### கசூர்ணா...

காலை 6 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை கடற்படை அனுமதி வழங்கியிருந்த போதிலும் இத்தீர்த்தத்திற்கு செல்வதற்கு அடியார்கள் தயாராக இருக்கும் பட்சத்தில் பஸ் சேவையை நடாத்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை தயாராகயிருப்பதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க)

## மருதானையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை மீனவர்களை விடுவிக்கக் கோரி மருதானைச் சந்தியில் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றைமீனவர்கள் நடாத்தியிருந்தனர்.

மாலைதீவு இந்தியா கடற்படையினர் பிடித்து வைத்திருக்கும் இலங்கை மீனவரை விடுவிக்க கோரியேஇவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டது.

இவ் ஊர்வலத்தில் சுமார் 200 மீனவர்கள் கலந்து கொண்டார்கள். ஊர்வலமாகச்சென்ற இம்மீனவர்கள் கடற்றொழில் அமைச்சர் மகிந்தராஜபக்சவிடம் மகஜர் ஒன்றைசமர்ப்பித்திருந்தனர். [வ]

### யாழ்ப்பாண...

யாழ் போதனா வைத்தியசாலை எதிர்நோக்கும், ஊழியர் தட்டுப்பாடு தளபாட பற்றாக்குறை, வைத்தியர் பற்றாக்குறை மற்றும் குறைபாடுகள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

தெல்லிப்பழை புற்றுநோய் ஆஸ்பத்திரி மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற அதேவேளையில் அருகில் உள்ள தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை மீண்டும் ஏன் இயக்கக்கூடாது எனவும் கேள்வி எழுப்பப்பட்டது.

யாழ். மாவட்ட கல்விநிலை பற்றி உரையாடலின்போது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மீண்டும் திறக்கப்படவேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டது.

மேலும் திறந்த பல்கலைக் கழக யாழ் பிராந்திய நிலையத்தில் கல்விகற்கின்ற மாணவர்களுக்கு போதிய நூல்கள் தருவிக்கப்படவேண்டும்.

மேலும் தபாலகங்கள் பலவும் தனியார் வீடுகளில் இயங்கிவருவதாகவும் இவற்றுக்கு நிரந்தர கட்டிடம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தீவகமக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து நெருக்கடிகள் குறித்து விளக்கமாக ஆராயப்பட்டது.

மின்சாரம் வழங்காத ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவது குறித்தும் ஆராயப்பட்டது.

தென்மராட்சியின் அபிவிருத்தி குறித்து அரச அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் இது விடயத்தில் தற்போதைக்கு எதுவும் செய்ய முடியாதென்றும் இதுவிடயத்தில் குழு ஒன்று அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் வன்செயல்களில் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்கள் மீண்டும் புனருத்தாரணம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் வலியுறுத்தினார்.

யாழ். போதனா வைத்தியசாலை பிரேதச்சாலை தகுந்த முறையில் பராமரிக்கப்படுவதுடன் இறந்தவர்களுக்குரிய மரியாதை வழங்கும் விதத்திலாவது சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கடமை புரிய வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

### அரசியல்...

பேரணி ஒன்று கொழும்பில் இடம்பெற உள்ளது.

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து மேற்படி பேரணியை ஆகஸ்ட் 1ம் திகதி நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலான தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இம் முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அவர்மேலும் தெரிவித்தார். (வ-க)

### வைத்தியசாலை...

ளார்.

இவ்வாறு படையினர் ஆயுதங்களுடன் வருவதால் நோயாளிகளுக்கு பெரும் அசௌகரியம் ஏற்படுவதாக நோயாளர் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமானதாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-க)

### சரசாலை...

நிலையம் மேலும் தெரிவிக்கையில் சரசாலைப்பகுதியில் விடுதலைப்புலிகள் ஆர்.பி ஜி. மற்றும் பீரங்கித் தாக்குதலை நடத்தியதாகவும் இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் இம் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஐவரும் படையினர் தரப்பில் ஒருவரும் பலியாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கிளாலியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் மட்டக்களப்பு வாகனேரிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக

உள்நாட்டுவெளிநாட்டுநேரடி (IDD)
தொலைபேசி அழைப்புகளை
உடன் பெற்றுக் கொள்ளலாம்
தொலை நகல் (FAX) வசதியும்
செய்யப்பட்டுள்ளது
G.S.B. Communication Centre

கஜன்
ஊர்காவற்றுறை
நாசர், குஷ்பு, வடிவேலு
நடித்த
கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை

உள்நாட்டு வெளிநாட்டு நேரடி (IDD)

தொலைபேசி அழைப்புகளை

உடன் பெற்றுக் கொள்ளலாம்

தொலை நகல் (FAX) வசதியும்

செய்யப்பட்டுள்ளது

G.S.B. Communication Centre

444/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

(பாப்பையா கடைச் சந்தி)

[சி-674]



கஜன்

ஊர்காவற்றுறை

நாசர், குஷ்பு, வடிவேலு நடித்த

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

காட்சி நேரம்

பி.ப 3.30 மணி

(கி/652)


ரணம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் வலியுறுத்தினார்.

யாழ். போதனா வைத்தியசாலை பிரேதச்சாலை தகுந்த முறையில் பராமரிக்கப்படுவதுடன் இறந்தவர்களுக்குரிய மரியாதை வழங்கும் விதத்திலாவது சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கடமை புரிய வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

சில விடயங்களுக்கு யாழ். அரச அதிபர் சண்முகநாதன் தகுந்தவிளக்கமளித்தார்.

(வ-க)

கள் தரப்பில் ஐவரும் படையினர் தரப்பில் ஒருவரும் பலியாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கிளாலியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் மட்டக்களப்பு வாகனேரிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் இராணுவ தரப்பில் ஒருவர் காயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-க-7)


யாழ் நகரில்

★ மிகவும் அமைதியான சூழலில்

★ குடும்பத்துடன், நண்பர்களுடன் சுவைத்து மகிழ

"சூர்யா சைனீஸ்"

★ சூப் வகைகள்

★ புறியானி (F) பிறைற்றைஸ் வகைகளா

★ மேல் நாட்டு உணவுவகைகளா

★ மற்றும் ஆடர்கள் பிரத்தியேகமாக கவனிக்கப்படும்

★ ஒருமுறை சுவைத்தால் மறுமுறை சுவைக்கத் தோன்றும்

"சூர்யா சைனீஸ்" சுவைப் பிரியர்களின் சொர்க்கம்

163. கஸ்த்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி 677)



இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள [illegible] அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.